பதினோராண்டு பள்ளிப்படிப்புத் திட்டத்தின்கீழ் (1969 திட்டம்) 1980 ஆம் ஆண்டு அக்டோபரில் நடைபெற்ற பள்ளி இறுதி வகுப்புத் தேர்வில் (எஸ்.எஸ்.எல்.சி.) தேர்ச்சி பெறாத மாணவர்கள் இனி அப்படிப்பை முடித்து மேற்கொண்டு படிப்பைத் தொடர முடியாமல் உள்ள அவல நிலை குறித்து

[1981 மார்ச் 2

செல்வி அ. லீலாவதி : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த மாணவர் களுக்கு 10 ஆம் ஆண்டுப் பரீட்சைத் தாள்களையே கொடுத்தால், நன்றாக இருக்கும். ஏனென்றால், அவர்களை மார்ச் மாதம் பரீட்சை எழுத முடியாமல் செய்து, அவர்கள் அக்டோபர் மாதம் பரீட்சை எழுதக்கூடிய நிலை ஏற்படு மானால், அவர்களுக்கு வயதாகிவிடும் நிலைமையும் ஏற்பட்டுவிடும். வேலை வாய்ப்புக்குத் தடை ஏற்படும். ஆகவே கால தாமதம் இல்லாமலிருக்கும் பொருட்டு இந்த 10 ஆம் ஆண்டு பரீட்சைத் தாள்களையே கொடுப்பதால், மாணவர்களுக்கும் பாதகமில்லை, அரசுக்கும் பாதகமில்லை. அவர்கள் அந்த பரீட்சைத் தாள்களையே எழுதலாம் என்று நினைக்கிறேன். அதைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசிலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, 10வது ஆண்டு பரீட்சைத் தாள்களை வைத்து எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்கள் பரீட்சையை மார்ச்சில் எழுத முடியாது. அவர்கள் அக்டோபரில்தான் பரீட்சை எழுத முடியும். இதற்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன. அவர்கள் புதிய புத்தகங்களைப் படிக்க வேண்டிய நிலைமைகள் இருக்கின்றன. இன்னொரு காரணம், பரீட்சை நிறுவனத்தில் திடீரென்று நாம் எந்த மாறுதலையும் செய்ய முடியாது. அதற்கு வேண்டிய முன்னேற்பாடுகள் சிலவற்றைச் செய்ய வேண்டியிருக்கிறது. இப்போது கம்ப்யூட்டர் முறைகள் பயன்படுத்தப்படுவதால், இடையிலே எந்தவிதமான மாறுதலையும் செய்ய முடியாது. குறுகிய காலத்தில் அவைகளைச் செய்வதற் கில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(2) தமிழ்நாடு வேளாண்மைத் துறை ஊழியர்கள் தங்கள் 7 அம்சக் கோரிக் கைகளை வலியுறுத்தி பேரணி நடத்தியும், உண்ணா நோன்பிருந்தும் பலன் இல்லாமை குறித்து.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு வேளாண்மைத் துறை ஊழியர்கள் தங்கள் 7 அம்சக் கோரிக்கை களை வலியுறுத்தி 23-1-1981 அன்று பேரணி நடத்தியும், 24-1-1981 அன்று சென்னை அண்ணா சதுக்கத்துக்கருகே உண்ணா நோன்பிருந்தும் பலன

தமிழ்நாடு வேளாண்மைத் துறை ஊழியர்கள் தங்கள் 7 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி பேரணி நடத்தியும், உண்ணா நோன்பிருந்தும் பலன் இல்லாமை குறித்து

1981 மார்ச் 2] *[திரு. க. மீனாட்சிசுந்தரம்]*

இல்லாததால் அரசிடம் அதிருப்தியடைந்து மனவருத்தத்துடன் அல்லல்படும் நிலை குறித்து மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை @ ஒன்று அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: தலைவர் அவர்களே, பதவி உயர்வு பெற்ற துணை வேளாண்மை அலுவலர்களுக்கும் பட்டம் பெற்று நேரடியாக அமர்த்தப்படும் துணை வேளாண்மை அலுவலர்களுக்கும், அவர்கள் சம வேலை பார்ப்பதால், சம ஊதியம் வழங்கப்பட வேண்டுமென்று சொல்வது நியாயமானது என்றும், ஊதியக் குழு இதை முறையாக ஆய்வு செய்யவில்லை என்றும், எனினும் இவர்களுடைய கோரிக்கை இறுதியாக நிறைவேற்றப்படும் என்றும் தமிழ்நாடு உதவி வேளாண்மைத் துறை அலுவலர்கள் சங்க விழாக் களிலே முன்பிருந்த வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்கூடக் கூறி யிருக்கிறார்கள். இப்போதிருக்கின்ற வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும் 29-10-1980 அன்று திருச்சியிலே அவ்வாறு கூறியிருக்கிறார்கள். அது நிறைவேற்றப்படுமா என்றும் அதற்கு உத்தாவிடப்படுமா என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, ஒரு நபர் குழுவினுடைய அறிக்கை வந்த பிறகு முடிவு செய்யப்படும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த அறிக்கையிலே 1-வது, 2-வது, 3-வது, 4-வது கோரிக்கைகள்பற்றி ஒரு நபர்க் குழுவினுடைய அறிக்கையை எதிர்பார்ப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இதைப்போலவே வேறு துறைகளிலேயும் எந்தப் பிரச்சினைகளை எழுப்பி னாலும், சம்பந்தப்பட்ட அமைச்சர் ஒரு நபர்க் குழு அறிக்கை, ஒரு நபர்க் குழு அறிக்கை என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஒரு நபர்க் குழு அறிக்கை அரசுக்கு வந்து பல மாதங்கள் ஆகின்றன என்று நாங்கள் கேள்விப் படுகிறோம். அது எப்போது வெளியிடப்படும்? அது எப்போது ஆராயப் படும்? ஆராய்ந்தறிந்து அரசு ஏற்பதாக எப்போது அறிவிக்கும்? அந்த அறிவிப்பை எப்போது செய்யும் கேட்டுக்கொள்கிறேன்.

@ 80-82 ஆம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது

தமிழ்நாடு வேளாண்மைத் துறை ஊழியர்கள் தங்கள் 7 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி பேரணி நடத்தியும், உண்ணா நோன்பிருந்தும் பலன் இல்லாமை குறித்து.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, ஒரு நபர்க் குழு அறிக்கை அளித்ததற்குப் பிறகு அதை நிதித் துறை ஆராய்ந்து அதன் மீது முடிவு எடுக்கப்படும். நிதித் துறை எப்போது முடிவு வெளியிடுகிறதோ அப்போது அறிவிக்கப்படும்.

5. அரசின் தீர்மானம்.

அலுவல் வரிசையில் மாற்றம் குறித்து.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

"மேலவை விதி 23(1)-ன் கீழ் இன்றைய நிகழ்ச்சி நிரலில் இடம் பெற்றுள்ள அரசின் சட்ட முன்வடிவுகளில் 3-வது இனமான, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 9/1981) முதல் இனமாக எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

என்று முன் மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

'மேலவை விதி 23(1)-ன் கீழ் இன்றைய நிகழ்ச்சி நிரலில் இடம் பெற்றுள்ள அரசின் சட்ட முன்வடிவுகளில் 3-வது இனமான, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 9/1981) முதல் இனமாக எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.